மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம் : வரலாறு

வாரம் - 25

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை N. பத்மலோஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

# உலகமகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

- ஐக்கிய நாடுகள் சபை

  இரண்டாம் உலக மகாயுத்தம் நடைப்பெற்றுக் கொண்டிருக்கையில் இடை நடுவில் பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி பிராங்லின் ரூஸ்வெல்ட் 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அத்திலாந்திக் பிரகடனத்தில் கையொப்பம் இட்டனர். அதைத் தொடர்ந்து 1943 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரஷ்யா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மொஸ்கோ நகரில் நடைப்பெற்ற பேச்சு வார்த்தைகளில் உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சர்வதேச நாடுகளின் அமைப்பொன்றை அமைப்பது குறித்து கலந்துரையாடினர்.

1) ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்ப அங்கத்துவ நாடுகள் எத்தனை?
2) ஐக்கிய நாடுகளின் தினமாகக் கருதப்படுவது எத்தினமாகும்?
3) ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் 03 தருக.
4) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான 06 நிறுவனங்களும் எவை?
5) சமூகப் பொருளாதார சபைக்குக் கீழ் இயங்கும் இணை நிறுவனங்கள் நான்கைக் குறிப்பிடுக.
6) ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தை பாதுகாப்பதற்காக எடுத்த முயற்சிகளை உதாரணங்களுடன் விளக்குக.
7) தற்கால உலகில் சமாதானத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை எடுத்துள்ள நடவடிக்கைகளை குறிப்பிட்டு விளக்குக.